பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 12 2025 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. இளையோர் மேம்பாட்டின் மூலம் நாட்டின் வளர்ச்சியை அதிகரிக்க மத்திய அரசு செயலாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. நாட்டில் பின்தங்கிய பகுதிகளை சேர்ந்த இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்த பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
3. நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மக்களை மையமாகக் கொண்ட நிர்வாக சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
4. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கச் சட்டத்திற்கு அரசியல் உள்நோக்கத்துடன் திமுக எதிர்ப்பு தெரிவிப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.
5. சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி — ஸ்ரீவள்ளி ராஷ்மிகா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>>

இளையோர் மேம்பாட்டின் மூலம் நாட்டின் வளர்ச்சியை அதிகரிக்க மத்திய அரசு செயலாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தொகுதி விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு நாள் விழாவில் காணொலி வாயிலாக இன்று அவர் உரையாற்றினார்.

இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகள் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் திறன்களை வெளிக்கொண்டு வந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வலுவான தேசத்தை கட்டமைக்கவும், இளைஞர்கள் இடையே ஒழுக்கத்தை மேம்படுத்தவும் விளையாட்டுகள் முக்கிய பங்காற்றுவதாக அவர் கூறினார்.

இதுபோன்ற விளையாட்டு விழாக்கள் இளைஞர்கள் இடையே விளையாட்டு ஆர்வத்தை அதிகரித்துள்ளதாகவும், இதனால் சிறந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>>

நாட்டில் பின்தங்கிய பகுதிகளை சேர்ந்த இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்த பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து

வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் நடைபெற்ற மத்திய அரசின் விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா கோவை மாவட்டம் ஆலங்கொம்பில் இன்று நடைபெற்றது.

வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கி பேசிய டாக்டர் எல். முருகன், அனைத்துத் துறைகளிலும் இந்தியா மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்து வருவதாக கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் (1)— 52 Sec.)***

விளையாட்டுகளில் மாணவர்கள் அதிக ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் அறிவுறுத்தினார்.

***(Sound Byte — எல். முருகன் (2) — 37 Sec.)***

<<<<<<<>>>>>>>

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மக்களை மையமாகக் கொண்ட நிர்வாக சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலன் மற்றும் பொது மக்கள் குறைதீர்ப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

நல்லாட்சி தினத்தை முன்னிட்டு தில்லியில் பயிலரங்கு ஒன்றை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நல்லாட்சி என்பது வெறும்

முழக்கம் அல்ல என்றும் அது வெளிப்படைத் தன்மை,பொறுப்புணர்வு, மக்களை மையமாக கொண்ட நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய தீவிர செயல்பாடு என்றும் கூறினார்.

பொது வாழ்வில் நேர்மை என்ற கொள்கையில் மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் உறுதியுடன் இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

எனவே வாஜ்பாயின் பிறந்த தினம் நல்லாட்சி தினமாக கொண்டாடப்படுகிறது என்று அவர் கூறினார்.

2014-ம் ஆண்டுக்குப் பிறகு பிரதமர் திரு நரேந்திர மோடி, "குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம்" என்ற கொள்கையுடன் தீவிரமாக செயல்படத் தொடங்கியதாக அவர் தெரிவித்தார்.

நல்லாட்சியை உறுதி செய்ய, அரசு ஊழியர்களின் திறன்களை தொடர்ந்து மேம்படுத்தத வேண்டும் என்று அவர் கூறினார்.

நிர்வாகத்தில் உள்ள சவால்களை எதிர்கொள்ள அரசு ஊழியர்களுக்கு உதவும் வகையில் இன்று ஐந்து முக்கிய முன்முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிர்வாக சீர்திருத்தங்களுடன் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவது, வளர்ச்சியை அதிகரித்து, நல்லாட்சியை உறுதி செய்யும் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>>

கடலூர் மாவட்டத்தில் நேற்றிரவு ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாக கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கச் சட்டத்திற்கு, திமுக அரசியல் உள்நோக்கத்துடன் எதிர்ப்பு தெரிவித்து வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து திமுக ஆட்சிக்கு வந்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக 14 லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளபோதும், தேவையின்றி திமுக, மத்திய அரசை குறை கூறிவருவதாக அவர் தெரிவித்தார்.

புதிய சட்டத்தின்மூலம் ஊரகப்பகுதிகளில் 100 நாள் வேலைவாய்ப்பை 125 நாட்களாக மத்திய அரசு உயர்த்தியுள்ளதாகவும், இது கிராமப்புற மக்களுக்கு பெரிதும் பயன் அளிக்கும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

இதனிடையே, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடலூர் மாவட்டத்தில் அரசு பேருந்தின் டயர் வெடித்து ஏற்பட்ட விபத்து துயரம் அளிப்பதாக கூறியுள்ளார்.

கடந்த 2 மாதங்களில் நான்கு பெரிய விபத்துகள் நடைபெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசு பேருந்துகளை முறையாக பராமரிக்க திமுக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் குறைந்து காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் — 26 Sec. )***

<<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

**தென்காசி அருகே ஆட்டோ மீது அரசு பேருந்து மோதி ஏற்பட்ட விபத்தில் 4 பேர் காயமடைந்தனர்.**

--------------

திருவண்ணாமலை ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேம்பாட்டுப்பணிகளை தெற்கு ரயில்வே பொது மேலாளர் திரு ஆர் என் சிங் ஆய்வு செய்தார்.

-----------------

**தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் வனப்பகுதியில் சுற்றுலா வேன் கவிழ்ந்ததில் 13 பேர் காயமடைந்தனர்.**

------------

**கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலயன் சுவாமி கோவிலில் மார்கழி பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.**

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சோலாப்பூரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி — ஸ்ரீவள்ளி ராஷ்மிகா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-3, 6-0** என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Lunda Kumhom — Tanuchaporn** இணையை வென்றது.

இப்போட்டியில், இந்தியாவின் **Zeel Desai** — ரஷ்யாவின் **Elina Nepliy** இணையும், வைஷ்ணவி அட்கர் — அங்கிதா ரெய்னா இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி, ஸ்ரீவள்ளி ராஷ்மிகா, வைஷ்ணவி அட்கர், ரேவதி ராஜேஸ்வரன் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் இன்று நடைபெற்ற ஆட்டங்களில் ஹரியானா — சண்டிகர் அணியையும், உத்தராகண்ட் — உத்தரப்பிரதேச அணியையும் வென்றது.

**<<<<<<<END>>>>>>>**